**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 417/2011 LW-1 PW-1

| | |
|---|---|
| Name | காளிதாஸ் |
| Husband/Father Name | மீனாட்சிசுந்தரம் |
| Village /Area | கரூர் |
| Taluk | |
| Occupation | வனசரக அலுவலர் (ஓய்வு), ஆற்காடு சரகம் |
| Age | 70 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 31.05.2024 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(2,3,4,7 எதிரி ஆஜர். எதிரி 5, 6 ஆஜரில் இல்லை. 5,6 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

15.12.2010 காலை 7 மணிக்கு நானும் வனவர் ஜெயக்குமார், வனக்காப்பாளர் ஆறுமுகம், ரேனுகோபால் ஆகியோருடன் சரகர் ஜீப்பில் காரையில் இருந்து புளியங்கண்ணு செல்லும் சாலையில் நவலாக் கூட்ரோட்டில் காலை 10 மணியில் இருந்து வாகன தணிக்கையில் ஈடுப்பட்டபோது சுமார் 11.30 மணியளவில் பாலாற்றங்கரையில் இருந்து நவலாக் கூட்ரோட்டை நோக்கி வந்த வெள்ளை மாருதி வேன் பாண்டிச்சேரி பதிவெண் கொண்டது. பதிவெண் நினைவில்லை. வாகனத்தை நிறுத்திய போது முன்பு உட்கார்ந்திருந்த ஒருத்தர் தப்பி ஓடிவிட்டார். ஆஜர் எதிரிகள் ராஜேஷ், பாலாஜி, சரவணன் ஆகியோர் வாகனத்தின் உள்ளே இருந்தார்கள்.

வாகனத்தில் 12 செம்மரகட்டைகள் இருந்தது. எதிரிகள் உரிய அனுமதி இல்லாமல் செம்மரகட்டைகளை வைத்திருந்தார்கள். அவர்களை கைது

செய்து H நமுனாவை வேனுகோபால் தயார் செய்தார். வனகாப்பாளர் ஆறுமுகம் மகசரில் செம்மரக்கட்டைகள் (12 துண்டுகள்) மற்றும் அதை எடுத்து சென்ற வாகனத்தையும் கைப்பற்றினார். பாலாஜி வனவர் தோராயமாக வரைபடம் வரைந்தார். எதிரிகளிடம் விசாரணை மேற்கொண்டதில் எந்த அனுமதியும் இல்லாமால் செம்மரக்கட்டைகள் எடுத்து சென்றதால் நான் அதை கைப்பற்றினேன்.

விசாரணைக்காக எதிரிகள் வனசரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து தனிதனியாக ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். கைப்பற்றபட்ட 12 செம்மர துண்டுகள், வாகனத்தை மாவட்ட வன அலுவலகம் வேலூரில் படிவம் 95 மூலம் விவர பட்டியல் தயார் செய்து ஒப்படைத்தோம். மேற்படி 12 செம்மர துண்டுகளை எடை போட்டு பார்த்த போது 153 கிலோ இருந்தது. அதன் மதிப்பு ரூ.34,425 ஆகும். தப்பி ஓடிய நபர் நந்தன் என்று விசாரணையில் தெரிந்துகொண்டேன். எதிரிகள் நால்வரையும் அவர்களுடன் இருந்த அமிர்தராஜையும் அன்றை தினம் திமிரி சாலையில் வைத்து கைது செய்தேன். விசாரணையில் 4 எதிரிகளும் கருணாகரன் மற்றும் நந்தன் (எ) நந்தகோபால் எதிகளிடம் செம்மரங்களை வெட்டி அவர்களிடம் கொடுத்தால் நல்ல விலை கொப்பதாக ஆசை காட்டியதாக கூறினார்கள்.

எதிரிகள் தகரகுப்பம் மற்றும் மாம்பாக்கம் ஆகிய ஏரி பகுதிகளிலும், பானாவரம் காப்பு காட்டு பகுதிகளில் இருந்தும் செம்மரங்களை வெட்டி எதிரி பாலாஜி வேலை செய்யும் பண்ணையில் மறைத்து வைத்தது இருந்ததாகவும் சம்பவ தினம் அவர்கள் விற்றது போக மீதம் இருந்த செம்மர கட்டைகளை எடுத்து வந்த போது எங்களிடம் சிக்கி கொண்டதாகவும் கூறினார்கள். மாம்பாக்கம் மற்றும் தகரகுப்பம் ஏரி பகுதி என்பதால் சம்மந்தப்பட்ட காவல் துறையினரிடம் புகார் கொடுக்கப்பட்டது.

பானாவர காப்பு காட்டில் வெட்டப்பட்ட மரங்கள் தொடர்பாக சோளிங்கர் நடுவர் நீதிமன்றத்தில் ஆள் இல்லா குற்ற வழக்காக வழக்கு பதியப்பட்டுள்ளது. மேற்கண்ட இடங்களில் செம்மரம் வெட்டியதை ஊர்ஜிதப்படுத்தி கொண்டு வழக்கு பதிவு எதிரிகள் மீது வனக்குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த அறிக்கை **அ.சா.ஆ.1** ஆகும்.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.